بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *09/12/2022* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 40 அன்னாரது புகழத்தக்க பண்புகள் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்புகள்**

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۝ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ۝ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۝ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ۝ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ۝ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ۝ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ۝

கடந்த ஜுமுஆ குத்பாவில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பற்றிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில மேற்கோள்களை எடுத்துரைத்திருந்தேன். இது தொடர்பாக மேலும் சில மேற்கோள்களை எடுத்துரைக்கிறேன். **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** சந்தேகம் இன்றி, அபூபக்ர் சித்தீக் மற்றும் உமர் ஃபாரூக் எப்படிப்பட்ட கூட்டத்தின் தலைவர்களாக இருந்தார்கள் என்றால், அந்தக் கூட்டம் அல்லாஹ்வுக்காக உயரத்தையும் கடந்தார்கள். அவர்கள் நாகரீகமானவர்களுக்கும், நாடோடிகளுக்கும் உண்மையின் பக்கம் அழைப்பு விடுத்தார்கள். எதுவரை என்றால் அவர்களது இந்த அழைப்பு தொலைதூர நாடுகள் வரை பரவிச் சென்றது. இவ்விருவரது கிலாஃபத்தில் பெருமளவில் நற்பலன்கள் இஸ்லாத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டன. பல்வேறு விதமான வெற்றிகளுடன் முழுமையான நறுமணத்தால் மணம் கமழச்செய்யப்பட்டது.

இஸ்லாம் ஹஸ்ரத் சித்தீக்கே அக்பர் (ரலி) அவர்களது காலகட்டத்தில் பல்வேறு விதமான குழப்பங்களின் நெருப்பினால் வேதனையுற்றிருந்தது. வெளிப்படையாக கொள்ளை சம்பவங்கள் (நடத்தி) அவரது ஜமாஅத்தின் மீது தாக்குதல் தொடுத்து அதனை அபகரித்து விட்டு, வெற்றி முழக்கம் இடும் தருணம் மிக அருகில் இருந்தது. எனவே சரியான அந்தத் தருணத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களது உண்மையின் காரணத்தினால் கம்பீரமிக்க இறைவன் இஸ்லாத்தின் உதவிக்காக வந்தடைந்தான். மேலும் ஆழமான கிணற்றில் இருந்து மதிப்புமிகு செல்வத்தை வெளிக் கொணர்ந்தான். இவ்வாறாக இஸ்லாம் மிக மோசமான சூழ்நிலையிலிருந்து நல்ல நிலைமைக்கு திரும்பி வந்தது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** அன்னாருடைய புகழுக்குரிய பண்புகள் சூரியனைப் போன்று ஒளிர்கின்றன என்பது உண்மையாகும். எவர் நிராகரித்தாரோ அவர் பொய்யுரைத்தார்; மேலும், அழிவுடனும் ஷைத்தானுடனும் சென்றிணைந்தார். எவர்களுக்கு அன்னாரது அந்தஸ்து மற்றும் உயர் தகுதி பற்றிய சந்தேகம் இருக்கின்றதோ அப்படிப்பட்ட மக்கள் வேண்டுமென்றே தவறிழைத்தவர்கள் ஆவார்கள். மேலும் அவர்கள் அதிக

அளவு தண்ணீரை குறைவானதாக கருதுகிறார்கள். மேலும், முதல் தரம் வாய்ந்த மற்றும் கண்ணியமிக்க மனிதரை இழிவு படுத்தியுள்ளார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களால் நம்பிக்கையாளர்களுக்கு எப்போதும் வெற்றி மற்றும் முன்னேற்றமே வெளிப்பட்டுள்ளது. எந்த மனிதர் உலகில் இருந்து தனது தேவைகளுக்கு போதுமானவற்றை மட்டுமே பெற்றாரோ அவரைப்பற்றி அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் குடும்பத்தின் மீது அநீதி இழைத்தார்கள் என்று எவ்வாறு எண்ண முடியும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** அல்லாஹ், சித்தீகே அக்பர் அவர்கள் மீது கருணை புரிவானாக! அன்னார் இஸ்லாத்தை உயிர்ப்பித்தார்கள். நயவஞ்சகர்களைக் கொன்றார்கள். மேலும் மறுமை வரை தமது நன்மைகளின் பலன்களைத் தொடரச் செய்துள்ளார்கள். அன்னார் மிகவும் மன்றாடக் கூடியவராகவும் அல்லாஹ்வின் புறம் தம்மை அர்ப்பணித்தவராகவும் இருந்தார்கள். உருக்கமான துஆ மற்றும் அல்லாஹ்வின் முன் குனிந்து இருப்பது, அவனது சன்னிதானத்தில் மன்றாடலுடன் பணிவுடன் குனிந்தே இருப்பது, அவனது தொடர்பை வலுவாகப் பற்றி இருப்பது அன்னாரது பழக்கங்களில் ஒன்றாக இருந்தது. அன்னார் ஸஜ்தாவின் நிலையில் துஆவில் அதிகம் ஈடுபட்டு வந்தார்கள். திலாவத் செய்யும்போது அழுது வந்தார்கள். சந்தேகமின்றி, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாம் மற்றும் தூதர்களின் பெருமை ஆவார்கள். அன்னாரது மேன்மையான இயல்பு படைப்பினங்களில் சிறந்தவரான ரஸூல் (ஸல்) அவர்களது மேன்மையான இயல்புக்கு மிக நெருங்கியதாக இருந்தது. அன்னார் நபித்துவத்தின் நறுமணங்களை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருந்த மக்களுள் முதலாமவர் ஆவார்கள். கறை படிந்த துணிகளைத் தூய்மையானவையாகவும் சுத்தமான உடையாகவும் மாற்றிய மக்களுள் ஒருவர் ஆவார்கள். மேலும் நபிமார்களின் பெரும்பாலான நற்குணங்களில் நபிமார்களை ஒத்தவராக இருந்தார்கள்.

நாம் அன்னாரை அன்றி வேறு எந்த சஹாபியுடைய குறிப்பையும், அது யூகம் செய்பவர்களது யூகத்தினாலேயன்றி ஒருபோதும் திருக்குர்ஆனில் இருப்பதை உறுதியாகக் கண்டதில்லை. மேலும், யூகம் என்பது உண்மைக்கு எதிராக எவ்வித தகுதியுமற்றதாக இருக்கின்றது. அவ்வாறே அதனால் உண்மையைத் தேடுபவர்களுக்குத் திருப்தி அளிக்கவும் முடியாது. மேலும், எவர் அன்னாருடன் பகைமை பாராட்டினாரோ அப்படிப்பட்ட மனிதருக்கும் உண்மைக்கு இடையில் எப்படிப்பட்டதொரு மூடிய கதவு இருக்கின்றது என்றால் அது உண்மையாளர்களின் தலைவரை நோக்கி திரும்பாமல் திறக்காது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய ஆன்மாவில் உண்மை, விசுவாசம், நிலைத்திருத்தல் மற்றும் இறையச்சத்தை மேற்கொள்ளுதல் ஆகியவை அங்கமாக இருந்தன. முழு உலகமும் முர்த்ததாக ஆகிவிட்டாலும் அன்னார் அவர்களைப் பொருட்படுத்தவுமில்லை; பின்வாங்கவுமில்லை. மாறாக எப்போதும் தமது பாதத்தை முன்னோக்கியை கொண்டு சென்றார்கள். மேலும் இதன் காரணத்தினாலேயே அல்லாஹ் நபிமார்களுக்கு முற்றிலும் அடுத்தபடியாக உண்மையாளர்களுடைய குறிப்பை வைத்திருக்கின்றான். மேலும் கூறுகின்றான்:

فَأُولَٰٓئِكَ مَعَ الَّذِيۡنَ اَنۡعَمَ اللّٰهُ عَلَيۡهِمۡ مِّنَ النَّبِيّٖنَ وَالصِّدِّيۡقِيۡنَ وَالشُّهَدَآءِ وَالصّٰلِحِيۡنَ ۚ

இந்த வசனத்தில் சித்தீகே அக்பர் மற்றும் அன்னாரது பிற சிறப்புகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. ஏனென்றால் நபியே கரீம் (ஸல்) அவர்கள், அன்னாரது அந்தஸ்து மற்றும் மேன்மையின் புகழை வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காக, சஹாபிகளில் அன்னாரைத் தவிர வேறு எந்த சஹாபிக்கும் ஸித்தீக் என்று பெயர் வைக்கவில்லை.

இந்த வசனத்தில் இறை நெருக்கத்தைப் பெறுபவர்களுடைய உயர்தர அந்தஸ்துகள் மற்றும் இந்தத் தகுதிகளை கொண்டவர்களைப் பற்றிய மாபெரும் குறிப்பு உள்ளது. நாம் இந்த வசனத்தை உற்று நோக்கிய போது, இந்த வசனம் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களது மேன்மைகளுக்கான மாபெரும் சாட்சியாகும் என்பது தெரிய வந்தது. இதில் ஆழமான ரகசியம் உள்ளது. அது ஆராய்ச்சியில் ஈடுபடும் ஒவ்வொரு நபருக்கும் புலப்படுகின்றது. ஆக, அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது அருளுக்குரிய நாவினால் ஸித்தீக் என்ற பட்டப் பெயர் வழங்கப்பட்ட நபராவார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:-** இப்னு கல்தூன் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்கு வேதனை அதிகரித்து அன்னாருக்கு மயக்கம் ஏற்பட்டு விட்டது. அப்போது தொழுகைக்கான நேரம் வந்ததும் பெருமானார் (ஸல்) அவர்கள், அபூபக்ர் அவர்களிடம் (சென்று) அவர்கள் மக்களுக்கு தொழ வைக்குமாறு கூறவும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் மூன்று விஷயங்களைப் பற்றி வலியுறுத்தி அறிவுரை கூறிய பிறகு கூறினார்கள்:

அபூபக்ர் அவர்களது கதவைத் தவிர மஸ்ஜிதில் திறக்கக்கூடிய அனைத்துக் கதவுகளையும் மூடி விடுங்கள். ஏனென்றால் அனைத்து சஹாபிகளிலும் உபகாரம் செய்வதில் அபூபக்கரை விட மேலாக வேறு எவரையும் சிறந்தவராக நான் அறிந்திருக்கவில்லை என்று கூறினார்கள்.

பிறகு இப்னு கல்தூன் கூறுகிறார்கள்: அல்லாஹ் அன்னார் மீது புரிந்த பேரருள்களில் ஒன்றும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடன் அன்னாருக்கு இருந்த சிறப்புமிகு நெருக்கமும் யாதெனில், அன்னார் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கொண்டு செல்லப்பட்ட அதே கட்டிலில் எடுத்துச் செல்லப்பட்டார்கள். மேலும் அன்னாரது கபரும் நபியே கரீம் (ஸல்) அவர்களது கபரைப் போன்று ஒன்றாகவே வைக்கப்பட்டிருந்தது. மேலும், சஹாபிகள் அன்னாரது கபரை ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது கபருக்கு மிக அருகில் தோண்டியிருந்தார்கள். அன்னார் கூறிய இறுதி வார்த்தைகள், ‘அல்லாஹ்வே! எனக்கு முஸ்லிமாக இருக்கும் நிலையில் மரணத்தைத் தருவாயாக! மேலும் என்னை நல்லடியார்களுடன் இணைப்பாயாக!’ என்பதாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** அபூபக்ர் (ரலி) அவர்கள் இறை நெருக்கம் பெற்ற ஓர் அரிதான மனிதராக இருந்தார்கள். அவர்கள், இருள்களுக்குப் பிறகு இஸ்லாத்தின் முகத்திற்கு ஒளியூட்டிய மனிதராக இருந்தார்கள். இஸ்லாத்தை விட்டுவிட்டவர்களை அன்னார் எதிர்த்தார்கள். உண்மையை மறுத்தவர்களுடன் அன்னார் போரிட்டார்கள். மேலும், இஸ்லாத்தின் வீட்டில் நுழைந்தவர்களுடன் மென்மையாகவும் பரிவுடனும் நடந்து

கொண்டார்கள். அன்னார் இஸ்லாத்தைப் பரப்புவதற்காக கடினங்களைத் தாங்கிக் கொண்டார்கள். அன்னார் எதிர்த்து வந்த ஒவ்வொருவருக்கும் எதிராக எழுந்து நின்றார்கள். அன்னார் பொய் நபித்துவவாதம் புரிந்த ஒவ்வொரு நபரையும் அழித்தார்கள். மேலும் அல்லாஹுத்தஆலாவுக்காக அனைத்துத் தொடர்புகளையும் தூர எறிந்தார்கள்.

நபியே கரீம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதிலையே அன்னாரது அனைத்து வித மகிழ்ச்சிகளும் இருந்தன. நான் உண்மையிலேயே அபூபக்ர் சித்தீக் அவர்களை உண்மையாளராக கண்டேன். மேலும், ஆராய்ந்து பார்த்ததில் எனக்கு இந்த விஷயம் புலப்பட்டது. நான் அன்னாரை அனைத்து இமாம்களுக்கும் இமாம் ஆகவும், மார்க்கம் மற்றும் சமுதாயத்தின் ஒளி விளக்காவும் கண்ட போது, நான் அன்னாரை உறுதியாக பற்றி பிடித்துக் கொண்டேன். அன்னாரிடம் அடைக்கலம் பெற்றேன். மேலும், நல்லடியார்களுடன் நேசம் கொண்டு எனது இறைவனின் கருணையைப் பெற விரும்பினேன்.

எனவே அந்தக் கருணைமிக்க இறைவன் என் மீது கருணை புரிந்தான். எனக்கு அடைக்கலம் வழங்கினான். எனக்கு உதவி செய்தான். எனக்கு தர்பிய்யத் வழங்கினான். என்னை கண்ணியத்திற்குரியவர்களுள் இணைத்தான். தனது சிறப்பான கருணையினால் என்னை இந்த நூற்றாண்டின் முஜத்திதாகவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் ஆக்கினான். என்னை இல்ஹாமைப் பெறுபவனாக ஆக்கினான். என்னிடமிருந்து கவலையை அகற்றினான். உலகில் வேறு எவருக்கும் வழங்கிடாதவற்றை எனக்கு வழங்கினான். இவை அனைத்தும் அந்த கல்வி கற்காத நபியே கரீம் (ஸல்) அவர்கள் மீது கொண்ட நேசத்தின் காரணத்தினாலும் இறைநெருக்கம் பெற்ற அந்த மக்களின் மீதான நேசத்தின் காரணத்தினாலும் கிடைத்தது.

அல்லாஹ்வே! நீ உனது தூதர்களுள் சிறந்த, உனது காத்தமுல் அன்பியா மற்றும் உலகில் அனைத்து மனிதர்களை விடச் சிறந்தவராகிய முஹம்மது (ஸல்) அவர்கள் மீது துரூதையும் ஸலாத்தையும் அனுப்புவாயாக. இறைவன் மீது ஆணையாக! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹரமைனிலும் இரு கபரிலும் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய நண்பர் ஆவார்கள். அதாவது ஒன்று குகையின் கபர் ஆகும். மற்றொன்று மதீனாவில் படைப்பினங்களில் சிறந்தவராகிய நபி (ஸல்) அவர்களது கபருடன் சேர்ந்துள்ள கபராகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களது முன்னுதாரணத்தை எப்போதும் முன் வையுங்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது அந்த காலகட்டத்தைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். குரேஷிய எதிரிகள் எல்லாப் புறத்திலிருந்தும் தீமைகள் செய்ய முற்பட்டிருந்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களைக் கொல்ல திட்டம் தீட்டினார்கள். அக்காலம் மிகவும் சோதனைக்குரிய காலமாக இருந்தது. அச்சமயத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எவ்வாறு நட்பின் உரிமையை நிறைவேற்றினார்களோ அதன் உதாரணம் உலகில் வேறு எங்கும் காணக் கிடைக்காது. இந்த ஆற்றல் உண்மை மற்றும் ஈமானின்றி ஒருபோதும் கிடைக்க முடியாது. இன்று நீங்கள் எத்தனை பேர் அமர்ந்துள்ளீர்களோ நீங்கள் தத்தமது இடத்தில் சிந்தித்துப் பாருங்கள்! ஒருவேளை இவ்வாறான ஏதேனும் சோதனை நம் மீது வந்து விட்டால், எத்தனை நபர்கள்

உடனிருக்க ஆயத்தமாக இருப்பர்! இந்த விஷயத்தைக் கேட்டு சிலரது கை கால்கள் அசைவற்றுப் போகும்; அவர்களுக்கு உடனடியாக தங்களது சொத்துக்கள் மற்றும் உறவினர்கள் பற்றி அவற்றை விட்டுவிட வேண்டுமே என்ற சிந்தனை வந்து விடும் என்பதை நான் அறிவேன். கடினமான தருவாயில் உடன் இருப்பதே எப்போதும் முழுமையான ஈமான் கொண்டவர்களது பணி ஆகும். எனவே எப்போது வரை செயல் ரீதியாக ஒருவர் ஈமானைத் தன்னுள் நுழைக்கவில்லையோ, வார்த்தைகளால் எந்தப் பலனும் இல்லை.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய நற்பண்புகளின் பெரும் தாக்கம் இருந்தது. மேலும் அன்னாரது உள்ளம் உறுதியான நம்பிக்கையின் ஒளியால் நிரம்பி இருந்தது. எனவே தான் எத்தகைய வீரம் மற்றும் நிலைப்புத் தன்மையை வெளிப்படுத்தினார்கள் என்றால், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்குப் பிறகு அந்த உதாரணம் கிடைப்பது கடினமாகும். அவர்களது வாழ்க்கை இஸ்லாத்தின் வாழ்க்கையாக இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்திற்கான இரண்டாவது ஆதம் ஆவார்கள் என்று நான் உண்மையாகவே கூறுகிறேன். ஒருவேளை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இருந்திருக்காவிட்டால் இஸ்லாமும் இருந்திருக்காது என்று நான் (உறுதியாக) நம்புகிறேன். ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் மாபெரும் பேருபகாரம் யாதெனில், அன்னார் இஸ்லாத்தை மீண்டும் நிலைநாட்டினார்கள். அன்னார் நபித்துவ பண்புகளைப் பொறுத்தவரையில் மற்ற அனைத்து மனிதர்களை விடவும் அதிகம் உரிமையுடையவராக இருந்தார்கள். மேலும், படைப்பினங்களில் சிறந்தவர் ஆகிய ரஸூல் (ஸல்) அவர்களின் கலீஃபாவாக ஆவதற்குத் தகுதியுடையவர்களில் முதலாமவர் ஆவார்கள்.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இறுதியில் கூறினார்கள்:* இதுதான் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் ஆவார்கள். அன்னார், அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்கள் மீதான நேசத்தில் தம்மையும் மாய்த்துக் கொண்டார்கள். பத்ரு போர் சஹாபிகள் தொடர்பான குறிப்பில் இது இறுதி குறிப்பு ஆகும். அது தற்போது நிறைவடைந்தது. அல்லாஹுத்தஆலா நமக்கு இந்த சஹாபிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்வதற்கும், அவர்கள் நிலை நாட்டிய தரத்தை நாமும் நிலைநாட்ட முயற்சி செய்பவர்களாக இருப்பதற்கும் நல்வாய்ப்பை வழங்குவானாக.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا
مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ
وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ
وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)**